**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. NO. 27/2015**

**20.01.2025 அ.சா.1** பால்ராஜ் த.பெ.அமலதாஸ்

A1 to 3 present.

**எதிரிகள் தரப்பில் குவிமுச. 311 மனு அனுமதிக்கப்பட்டு அ.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

இறந்துபோன என் தம்பி மார்டின் சார்லசை நானும், டேவிட், வேளாங்கண்ணி, பிரபு ஆகியோர் ஜிப்மர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச்சென்றோம் . . நானும் என் சகோதரரும்தான் அவருக்கு மருத்துவமனையில் நடந்த விவரங்களை சொன்னோமா என்றால் முதலில் மார்டின் சார்லஸ் சொன்னார் . பிறகு நான் சொன்னேன். ஜிப்மர் மருத்துவமனையில் அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டதாக குறிப்பு உள்ளது என்றால் சரியல்ல . என் தம்பி சுயநினைவோடு அடையாளம் தெரிந்தநபர்கள்தான் தாக்கியதாக சொன்னார் . அவர் அறுவை சிகிச்சைக்கு அழைத்துச்சென்றபோது சுயநினைவோடுதான் இருந்தார் . அவர் போலிசாரிடம் கையெழுத்துப்போடக்கூடிய மனநிலையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல . அவர் குடிபோதையில் தானா விழுந்து ஏற்பட்ட காயத்தினால்தான் இறந்துபோனார் என்றால் சரியல்ல..

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.